# பன்மொழி பேசும் குடும்பங்களில் பிள்ளைகளின் மொழி ஆற்றல்

அன்பார்ந்த பெற்றோர்களே

உலக மக்கள் தொகையில், அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள், பல மொழிகளைப் பேசுகின்றார்கள். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது, தனிப்பட்ட முறையிலும், குறிப்பாக தொழிற்துறையில் வளர்ச்சி பெறுவதற்கும் நன்மை பயக்கும்.

**ஓர் ஆரோக்கியமான பிள்ளையால் ஒரே வேளையில் அல்லது ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு அல்லது மூன்று மொழிகளைக் கற்றுக் கொள்ள முடியும்!**
பொதுவாக இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகள் பேசும் சூழலில் வளரும் பிள்ளைகளுக்கு, மொழி ஆற்றலில் சிரமங்கள் இருக்காது. தாய் மற்றும் தந்தையின் முதல் மொழியின் தரம் முக்கிய பங்கு வகிக்கின்றது. உங்கள் பிள்ளைக்கு, தனது முதல் மொழியை கற்றுக்கொள்வதில் சிரமம் இருப்பதைக் கண்டறிந்தால், பேச்சுப் பயிற்சி நிபுணத்துவ சேவையை அணுகுங்கள்.

**நான் எனது பிள்ளையுடன் எந்த மொழியில் உரையாட வேண்டும்?**
உங்களுக்கு பரிச்சயமான, பாதுகாப்பாக உணரும் மொழியில் பிள்ளைகளுடன் உரையாடுங்கள். இது, பெற்றோர் இருவருக்கும் பொருந்தும். உங்கள் இதயமொழியில், பிள்ளைகளுடன் உரையாடுவது முக்கியம். ஏனெனில், நீங்கள் மொழியை மட்டுமல்ல, உணர்வுகளையும் பிள்ளைகளுக்கு பரிமாறுகிறீர்கள்.

**எனது பிள்ளை தாய்மொழியை கற்றுக்கொள்ள நான் எவ்வாறு உதவலாம்?**
மொழிவிருத்தி அன்றாடம் நடைபெறுகிறது! உங்கள் முதல் மொழியில், பிள்ளைகளுடன் அன்றாடம் உரையாடுவது முக்கியம். உங்கள் பிள்ளையுடன் அதிகம் கதையுங்கள், பிள்ளைகளை உங்களுக்கு உதவ பழக்குங்கள், நீங்கள் தற்போது என்ன செய்கிறீர்கள் என்பதை விளக்குங்கள், பிள்ளை கேட்கும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள். மகிழ்வாக மொழியை விருத்தி செய்வதற்கான கூடுதலான வாய்ப்புக்கள்: சித்திரப் புத்தகங்கள் பார்த்தலும் விளக்கமளித்தலும், விதிமுறைகளை உள்ளடக்கிய விளையாட்டுக்கள், பாட்டுக்கள் பாடுதல், கவிதைகள் மற்றும் வசனங்களை பேசுதல். உங்கள் பிள்ளை, தொலைக்காட்சி, கணணி விளையாட்டுக்கள் போன்ற மின்னூடகங்களை பாவிக்கும் போது, ஆங்கிலத்தைப் பாவிக்காமல், முதல் மொழி அல்லது டொச்சைப் பயன்படுத்துங்கள்.

**எனது பிள்ளை மேலதிகமாக மொழியை கற்றுக்கொள்ள எவ்வாறு உதவலாம்?**
மொழியை, சக மனிதர்களுடனான தொடர்பால் ஏற்படும் அனுபவத்தின் மூலம் மட்டுமே கற்றுக்கொள்ள முடியும். உங்கள் பிள்ளை, மற்றவர்களைச் சந்திப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

இரண்டாவது மொழி பேசும் மக்கள் (பிள்ளைகளும் வயதுவந்தவர்களும்). உங்கள் பிள்ளை, மழலையர் விளையாட்டுக்குழுவில், டொச் மற்றும் தன் முன்னேற்றத்துக்கான பல விடயங்களையும், பின்னர் பாடசாலைக்கு தேவையான முக்கியமானவற்றையும் கற்றுக் கொள்கிறது.

**Schuldienste Rontal, Logopädischer Dienst,** Dorfstrasse 2, 6030 Ebikon,
Telefon 041 440 61 31, logopaedie@schuldienste-rontal.ch, www.schuldienste-rontal.ch

schuldienste rontal

உங்களுக்கும் மொழிகளில் ஆர்வம் உண்டு என்பதையும், உங்கள் பிள்ளை, இந்த மொழிகளைக் கற்றுக் கொள்வது, உங்களுக்கு முக்கியம் என்பதையும், உங்கள் பிள்ளைக்கு உணர்த்துங்கள். உதாரணமாக, நீங்கள் இன்னும் டொச்மொழியை நன்றாக பேசாதிருந்தால், நீங்களே ஒரு டொச்மொழி வகுப்பில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் பிள்ளையை ஊக்குவிப்பதுடன், முன்மாதிரியாகவும் விளங்குவீர்கள்.

**நீங்கள் இரு மொழிகள் பேசுபவர் (ஒருவர் அல்லது பெற்றோர் இருவரும்):**
இது பொருத்தமானது: உங்கள் பிள்ளைகளுடன், உங்களுக்கு தெரிந்த நெருக்கமான மொழியில் பேசுங்கள். இதன் மூலம், உங்கள் குடும்பத்தில், தாய்நாட்டுப் பற்றின் முக்கிய பகுதி பாதுகாக்கப்படுகிறது.
இரு மொழி பேசும் பெற்றோராகிய உங்களுக்கு, இரு மொழி பேசுபவர்களுடனும் பரவலான தொடர்புகள் இருக்கும். இது உங்கள் பிள்ளைக்கு கிடைத்த வாய்ப்பு! இரண்டாம் மொழி பேசும் பிள்ளைகளுடனும், பெரியவர்களுடனும் சந்திப்பதை வழக்கமாக வைத்திருத்தல், உங்கள் பிள்ளைகளுக்கு பயனுள்ளதாகும். சிறுவயதிலிருந்தே ஒரே ஒழுங்கில், முடிந்தவரை ஒவ்வொரு நாளும், மொழியை கேட்கும் போது, பிள்ளைகள் ஒரே வேளையில், இரு மொழிகளை, எளிதாக கற்றுக் கொள்கின்றனர், என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**தெளிவான மொழி விதிமுறைகள்**
உங்கள் பிள்ளை, சிறுவயதில் கற்கும் மொழிகளை, கலந்து கதைத்தல் இயல்பானது. இரண்டு மொழிகளையும், ஒரே நேரத்தில், கற்றுக் கொள்வது, உங்கள் பிள்ளைக்கு கடினம் என அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. எனினும், இவற்றை வரிசைப்படுத்தல் பணியில், உங்கள் பிள்ளைக்கு நீங்கள் உதவலாம்.

இயலுமானவரை இரண்டு மொழிகளையும் பிரித்துப் பேசுங்கள். நீங்கள் மொழிகளை, நபர்கள் சார்ந்ததாக, இடஞ்சார்ந்ததாக, சூழ்நிலைக்கு ஏற்ப, அல்லது தற்காலிகமாகவோ மாற்றிக் கொள்ளலாம். வாக்கியங்களுக்கு இடையில், நீங்கள் வேற்று மொழியை சேர்க்கக் கூடாது.

**மொழி ஒரு பொக்கிசம்...**
உங்கள் பிள்ளை, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசினால், பிற்காலத்தில், தன்னை மொழி மூலம் நன்றாக வெளிப்படுத்திக் கொள்ள முடிந்தால், அவருக்கு வாழ்க்கையிலும், வேலையிலும் உதவும் ஒரு பொக்கிசமாகவே கருதப்படுகிறது. இந்த பொக்கிசத்தை, எவரும் பிள்ளையிடம் இருந்து எடுக்க முடியாது.

**பல்வேறு மொழிகளை, நீங்களும் உங்கள் பிள்ளையும் கற்று, மகிழ்ந்து, கையாழ்ந்து வெற்றி பெற எமது மனமார்ந்த வாழ்த்துகள்!**

**Schuldienste Rontal, Logopädischer Dienst,** Dorfstrasse 2, 6030 Ebikon,
Telefon 041 440 61 31, logopaedie@schuldienste-rontal.ch, www.schuldienste-rontal.ch